16.03.2026

அ.வ.எண். 86/2022

**வா.சா.1 – திரு. பழனிச்சாமி, த/பெ. சென்னி (எ) சென்னிமாதாரி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.03.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக என் தகப்பனார் சென்னி மாதாரி கிரயம் பெற்றார் என்றால் ஆமாம். என் தகப்பனார் ஏக்கர் 3.79 சென்ட்டை கிரயம் பெற்றார். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். 14.10.2014 ம் தேதியன்று நான், சுப்பிரமணியம் மகன் பிரகாஷ் என்பவருக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் நான், பிரகாஷிற்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் என்றால் சரிதான். **14.10.2014 ம் தேதியிட்ட வாதி, பிரகாஷிற்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. க.ச.எண்.401/2 ல் நான், தனிப்பட்ட முறையில் கிரயம் பெற்றுள்ள சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரயம் பெற்ற சொத்து க.ச.எண்.401/2 க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில், 29.06.2012 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் கொடுப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் என் தகப்பனார் எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். **29.06.2012 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பி.சா.ஆ.1 சொத்து விவரத்தில் ஆறுமுகம் பூமிக்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 சொத்து விவரத்திலும் ஆறுமுகம் பூமிக்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து

பி.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பூமிக்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். வழக்குசொத்துக்கு என் தகப்பனார் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறப்பிற்கு பின்னிட்டு, வழக்கு சொத்து சம்மந்தமாக என் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் வீடு கட்டியுள்ள இடம் சுமார் 50 சென்ட் இருக்கும். வா.சாஆ.9 அ-பதிவேட்டில் பிரதிவாதி ஆறுமும் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள கைரேகை என் தகப்பனாருடையது இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக அதை நிரூபிக்க கைரேகை நிபுணரை நியமிக்க மனுத்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள கையொப்பம் மோசடியானது என சொல்லியுள்ள நிலையில் அது குறித்து குற்ற நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக அதை நிரூபிக்க கையெழுத்து நிபுணரை நியமிக்க மனுத்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடைய அல்ல என்று சொல்லியுள்ளேன். வா.சாஆ.6 கிரய பத்திரத்தில், 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை என்றும், அதில் என் பெயரோ அல்லது என்னுடைய தகப்பனார் பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபணம் செய்ய உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள கைரேகையானது என் தகப்பனாருடையது இல்லை என பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2020 ல் மேற்படி ஆவணம் குறித்து தெரியவந்தது என சொல்லியுள்ள நிலையில் அப்போது மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது கொரோனா காலம் ஆகும்.

6. வா.சா.ஆ.6 கிரய பத்திரம் மோசடியானது என சொல்லியுள்ள நிலையில், அதை ஏற்படுத்தியவரிடம் ரத்து செய்ய சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில், ரத்து செய்ய வேண்டி கேட்டேன் என தேதியோ அல்லது மாதமோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த தேதியில் கிரய பத்திரத்தை ரத்து செய்து தருவதாக சொன்னார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியை அணுகி அவர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை ரத்து செய்து தர சொன்னதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

7. பிரதிவாதி உரிய மறுபயன் கொடுத்து வா.சா.ஆ.6 ஆவணம் மூலம் சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரயத்திற்கு பின்னிட்டு அவரது பெயரை மாற்றம் செய்து அனுபவம் செய்து வருகின்றார் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் ஊழல் செய்துள்ளனர். வருவாய் துறையில் எவ்வாறு ஊழல் செய்துள்ளனர் எனது வழக்குரை மற்றும் சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி என் தகப்பனாரிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்துக்களை உரிய பாதுகாப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன்.

8. கிழமேல் ரோட்டுக்கு வடபுறமாக வழக்கு சொத்து உள்ளது. வழக்கு சொத்துக்கு மேல்புறமாக நான் வீடு கட்டியுள்ளேன். எனது வீட்டிற்கு கிழபுறம் உள்ள கம்பிவேலியை நான், சேதம் செய்ததாக சொல்லி பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த அது சம்மந்தமாக போலீசார் என்னை அழைத்து விசாரித்தனர் என்றால் ஆமாம். அதில் வழக்கு முடியும் வரை எவ்வித பிரச்சனையும் செய்ய மாட்டேன் என எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய வழக்கு சட்டப்படியும், வாதுரை படியும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur